# மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு விருது

**சென்னை, மார்ச் 14–**
சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு, 'பிளாட்டினம்' விருது வழங்கப்பட்டது.

சென்னையில், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை மற்றும் பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

## சூரிய மின்சக்தி

சென்னையில் உள்ள மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் பாதைகள், சுற்றுச்சூழல் மாசுபடாதபடி, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டப்பட்டு உள்ளன.

மின் சிக்கனத்துக்கு, சூரிய மின்சக்தி பேனல்கள் நிறுவப்பட்டுள்ளன. மெட்ரோ ரயில் பாதையில், 32 நிலையங்கள் உள்ளன.

சுரங்கத்திலும், தரைக்கு மேல் பாலத்திலும் அமைக்கப்பட்டு உள்ள நிலையங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் கட்டப்பட்டு, பசுமை மேம்பாட்டு பணிகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன.

## பிளாட்டினம்

இதையொட்டி, 32 மெட்ரோ ரயில் நிலையங்களுக்கும், 'இந்திய பசுமை கட்டட கவுன்சில்' சார்பில், பிளாட்டினம் விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை, இந்திய பசுமை கட்டட கவுன்சிலின், சென்னை தலைவர் ராகவேந்திரன், சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர், பங்கஜ்குமார் பன்சாலிடம், நேற்று வழங்கினார்.

**இந்திய பசுமை கட்டட கவுன்சிலின், சென்னை தலைவர் ராகவேந்திரன், சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர், பங்கஜ்குமார் பன்சாலிடம், விருது வழங்கினார்**